வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கா பவுல்ற்றி டெவலப்மெண்ட் (''தனியார்'') கம்பனியின் (''கம்பனி'') 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற கம்பனியின் செயலாற்றல் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ் அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 5,210,107 மற்றும் ரூபா 85,241,699 தொகையான முறையே மீளாய்வாண்டிற்கான பெறுமானத்தேய்வு ஏற்பாடு மற்றும் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் கொண்டுசெல்லும் பெறுமதி என்பவற்றின் சரியான தன்மையை தேவையான தகவல்களுடன் நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்படாததன் காரணமாக கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தன.

(ஆ) ரூபா 1,536,460 பெறுமதியான இருப்பு முன்னைய ஆண்டின் கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டின் கணக்குகளிலும் இது சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. ஆகையால் 2017 சனவரி 01 இல் உள்ளவாறான ஆரம்ப இருப்பு மற்றும் மீளாய்வாண்டிற்கான விற்பனைக் கிரயம் என்பன அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(இ) ரூபா 5,396,910 தொகையான வியாபார மற்றும் ஏனைய பெற வேண்டியவைகளை விலைச்சிட்டைகள், வயதுப் பகுப்பாய்வு மற்றும் உறுதிப்படுத்தல் போன்ற கணக்காய்வுச் சான்றுகள் காணப்படாததன் காரணமாக கணக்காய்வில் திருப்திகரமாக சரிபார்க்க முடியாதிருந்தது.

(ஈ) உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளரின் 2017 ஒக்தோபர் 24 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் கம்பனியானது 2000 - 2014 காலப்பகுதிக்காக ரூபா 27,682,676 வரிப் பொறுப்பை செலுத்த வேண்டியிருந்த போதிலும் எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் இது சுட்டிக்காட்டப்பட்ட போதிலும் நிதிக்கூற்றுக்களில் இது தொடர்பில் ஏற்பாடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்ட வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகளிற்கும் விபரமான பட்டியலில் காட்டப்பட்ட அதற்கு நேரொத்த தொகைக்கும் இடையில் ரூபா 1,209,540 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. மேலும், ரூபா 1,323,566 தொகையான வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள் தொடர்பான உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களிற்கானவை தவிர, கம்பனியின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.1.1 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

(ஆ) நான் அபிப்பிராயப்படுவதாவது:

- முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களிற்கான சாத்தியமான தாக்கங்கள் தவிர, கணக்காய்விற்கு

அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றன என்பதும்,

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்பதும் ஆகும்.

**2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 2002 திசெம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | கம்பனிக்குச் சொந்தமான கணனி உபபாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கை | |
| | (i) 4.2.6 ஆம் பிரிவு | காலாண்டு செயன்முன்னேற்ற அறிக்கையானது காலாண்டு முடிவடைந்து 30 நாட்களில் அல்லது அதற்கு முன்னர் வரிசை அமைச்சு மற்றும் பொதுத் திறைசேரியிலுள்ள பொது முயற்சிகள் திணைக்களம் என்பவற்றிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் கம்பனியால் அத்தகைய அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

**3. நிதிசார் மீளாய்வு**

**3.1 நிதிசார் விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான கம்பனியின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 17,948,695 நட்டத்துடன் ஒப்பிடும் போது ரூபா 15,284,383 வரிக்கு முன்னரான நட்டத்தை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 2,664,312 ஆன முன்னேற்றமொன்றினைச் சுட்டிக்காட்டுகின்றது. நிர்வாகச் செலவினம் ரூபா 4,800,634 ஆல் குறைவடைந்தமை மற்றும் ஏனைய வருமானம் ரூபா 1,708,396 ஆல் அதிகரித்தமை என்பன ஏற்பட்ட இவ் முன்னேற்றத்திற்குப் பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

2017 ஆம் ஆண்டிற்கான ஒவ்வொரு செயற்திட்டத்திற்குமான செயல்நடவடிக்கைத் திட்டத்திலுள்ள கிரய மதிப்பீடு உள்ளபடியான செலவினத்தை விட உயர்வாகக் காணப்பட்டதுடன் 2017 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கை கம்பனியால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 4.1.2 செயற்பாடும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முறைமை அல்லது கைமுறை மூலம் பேணப்பட்ட தரவுகள் காணப்படாததன் காரணமாக 2015 ஆம் ஆண்டிற்கான பரீட்சை மீதியை பெறமுடியாதிருந்தது. இதன் விளைவாக முன்னைய ஆண்டு நிதிக்கூற்றுக்களிலிருந்து ஆரம்ப மீதிகள் பெறப்பட வேண்டியிருந்ததுடன் முன்னைய ஆண்டுக் கணக்கு மீதிகளை அடிப்படையாகக் கொண்டு 2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. மேலும், 2016 ஆம் ஆண்டிற்கான உறுதிச்சீட்டுக்கள், பெறுவனவுகள் மற்றும் காசுப் புத்தகத்தினை அடிப்படையாகக்கொண்டு பேரேட்டுக் கணக்குகள் தயாரிக்கப்பட்டிருந்தன. ஆகையால், 2017 ஆம் ஆண்டின் ஆரம்ப மீதிகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஆ) தெரிவு பரீட்சிப்பின் போது குஞ்சு பொரிப்பக (hatchery) பிரிவிற்கு பெறப்பட்ட 301,220 முட்டைகளில் 200,639 முட்டைகள் குஞ்சு பொரிக்கும் இயந்திரத்தில் வைக்கப்பட்டிருந்தது. பொரித்த 168,417 கோழிக்குஞ்சுகளில் 161,117 மாத்திரம் விற்பனைக்குப் பொருத்தமானதாக இருந்தது. அதற்கிணங்க கோழிக்குஞ்சு உற்பத்தியின் செயற்திறன் பழைய இயந்திர செயற்பாட்டு நிலைமையின் பெறுபேறு ஒன்றான 301,220 மொத்த முட்டை எண்ணிக்கையில் 53 சதவீதமாக இருந்தது.

### 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறப்பட்ட மற்றும் வழங்கப்பட்ட அனைத்து பொருட்களும் முறையான மேற்பார்வையின்றி இருப்பு புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டிருந்தன. ஆகையால் மோசடிகள் மற்றும் தவறுகளை தடுப்பதற்கு போதியளவு உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) பண்ணை முழுவதும் மாறுகின்ற அடிப்படையொன்றின் கீழ் பாதுகாப்பிற்காக இரண்டு சிவில் பாதுகாப்பு ஆளணியினர் வேலையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் மேலதிகமாக இரவு நேரத்தின் போது இரண்டு சரிபார்க்கும் பொறுப்புடைய ஊழியர்கள் (Check roll employee) வேலையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். எவ்வாறாயினும், ரூபா 3,149,794 பெறுமதியான பெறுமதிமிக்க உயிரியல் மற்றும் அசையாச் சொத்துக்கள் மற்றும் ரூபா 85,241,699 பெறுமதியான ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பவற்றிற்கான பாதுகாப்பு போதாதிருந்தது.

(இ) வாகன விபரங்கள் மற்றும் வழங்கல் கட்டளைகள் உள்ளடங்கலாக பாதுகாப்பு பிரிவால் பேணப்பட வேண்டிய தகவல்கள் பாதுகாப்பு ஆளணியினரின் பற்றாக்குறை காரணமாக கம்பனியால் போதியளவில் பேணப்பட்டிருக்கவில்லை.

(ஈ) உள்ளக் கட்டுப்பாட்டிற்காக உருவாக்கப்பட்ட குயிக் புக் (Quick Book) முறைமை இரகசியக் குறியீடுகளின் இரகசியத்தன்மை கம்பனியால் பேணப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் தொடர்புபட்ட ஆவணங்கள் என்பன கணனி முறைமையிலுள்ள தவறு காரணமாக இழக்கப்பட்டிருந்தன. எனினும், அத்தகவல்கள் தொடர்பாக கம்பனியால் மென் பிரதிகள் முன்னரே அச்சிடப்பட்டிருக்கவில்லை. ஆகையால், கணனிமயப்படுத்திய கணக்குத் தகவல்களின் சேமிப்புக்கள் (Back-ups) சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) முட்டைகளின் விற்பனைகள் தொடர்பான காசுப் பற்றுச்சீட்டுக்களின் பிரதிகள் களஞ்சிய மேற்பார்வையாளரிற்கு அனுப்பப்பட்டிருக்காததுடன் முட்டைகள் வழங்கப்படுதல் வாடிக்கையாளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட மூலப் பிரதியை அடிப்படையாகக் கொண்டு களஞ்சிய மேற்பார்வையாளரால் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மேலும், கம்பனியிலிருந்து எடுக்கப்பட்ட இருப்பு பாதுகாப்பாளர்களால் அனுப்பப்பட்ட குறிப்புகளுடன் ஒப்பீடு செய்யப்பட்டிருக்காததுடன் இருப்பு புத்தகங்கள் வேலைப்பிரிப்பு மேற்கொள்ளப்படாமல் அதே உத்தியோகத்தரால் பேணப்பட்டிருந்தன. ஆகையால் முறையான உள்ளகக் கட்டுப்பாடு அமுல்ப்படுத்தப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது.

### 4.3 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 செப்தெம்பர் 22 ஆம் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம், ஆட்சேர்ப்புத் திட்டம் (எஸ்ஓஆர்) கம்பனியால் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் 2016 ஏப்ரல் 25 ஆம் திகதிய 02/2016 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிகையின் தேவைப்படுத்தப்பட்ட அளவுத்திட்டங்களிற்கு முரணாக கம்பனியால் சம்பளங்கள் செலுத்தப்பட்டிருந்தன.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 60 நாட்களினுள் நிதிக்கூற்றுக்கள் வரிசை அமைச்சு மற்றும் பொதுத் திறைசேரியிலுள்ள பொது முயற்சிகள் திணைக்களம் என்பவற்றிற்கான பிரதிகளுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆகஸ்ட் 8 இலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு

முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் கம்பனியின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாட்டு பரப்புக்கள் | குறைபாடுகள் |
|---|---|
| (அ) பெறுகைகள் | பெறுகை வழிகாட்டல்கள் பின்பற்றப்படாமை |
| (ஆ) கணக்கீடு | முறையான கணக்கீட்டு நடைமுறை பேணப்படாமை. |